

# வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி எம்.ஜி.ஆர்.நற்பணிமன்றம் தோன்றிய வரலாறு

திரு.எம்.ஜி.ஆர் அவர்கள் 1987.12.24 அன்றுகாலமானார்.அப்பொழுது இந்திய இராணுவம் எமது மண்ணில் இருந்த காலம்.எம்மவர்களால் கடற்கரை வீதியில் கறுப்பு கொடி பறக்க விட்டு துக்கம் அனுஸ்டிக்கப்பட்டது.அப்பொழுது காலை 10 மணி அளவில் எமது கிராமம் உட்பட அயல் கிராமங்களும் சுற்றி வளைக்கப்பட்டு உதய சூரியன் கடற்கரையில் எல்லோரையும் அழைத்தார்கள்.அப்பொழுது நாம் குடும்பத்தினருடன் வெளியில் வரும் பொழுது நாம் எம்.ஜி.ஆர் க்கு கட்டிய கறுப்புக் கொடி மூங்கில் வெட்டி வீழ்த்தப்பட்டுக் கொண்டு இருந்தது.இதை இந்திய இராணுவத்தினரே செய்தார்கள்.செய்யும் பொழுது"ஏய் உங்கடகிழட்டுப் புலி போயிட்டார் என கூறினார்கள்.இது என் கண்ணால் பார்த்த காட்சி என் அடி மனதில் இன்றும் பதிந்துள்ள நினைவுகளில் ஒன்று.

அதன் பின் கடற்கரையில் இருந்த பெரிய கொட்டிலில் ஒரு வருடம் 1989 ம் ஆண்டு எம்.ஜி.ஆர் உடைய சிறிய படம் வைத்து நினைவுநாள் அமைதியாக நடைபெற்றது.அதன் பின் போர் உக்கிரம் அடைந்த படியினால் செய்ய முடியவில்லை.நாமும் இடம் பெயர்ந்து வன்னிக்கு சென்றோம் .அங்கே வாழ்ந்த ஏழு வருடகாலத்தில் அங்கும் எம்.ஜி.ஆருக்கு நினைவு நாட்கள் மிக சிறப்பாக நடைபெற்றன.பின்பு 2002ம் ஆண்டு வன்னியில் இருந்து சொந்த இடங்களுக்கு வந்தோம்.அதன் பிறகு 2003,2004 ஆண்டுகளில் ஆலடியில் எம்.ஜி.ஆருடைய நினைவுநாள் 4 அடி உயரபடம் வைத்து நினைவு நாள் அனுஸ்டித்தோம்.இதற்கு

எமக்கு எமது கடற்தொழிலாளர் சங்கம் ,சமாசம் எமது கிராம அலுவலர் திரு.சிவபாலசிங்கம் மற்றும் பொதுமக்கள் என எல்லோரும் ஒத்துழைப்பு தந்தார்கள்.

2005ம் ஆண்டு எமது முத்துமாரி அம்மன் கோவிலில் சிற்ப வேலை செய்பவர்களிடம் எம்.ஜி.ஆருக்கு ஒரு சிலை செய்து தரும்படி கேட்டோம் அவர்களும் செய்து தருவதாக கூறினார்கள்.25000/=ரூபா செலவில் சிலை செய்யப்பட்டது .இதற்கு எமது ஊரில் உள்ள பெரியவர்கள் சங்கத்தினர் ஆகியோரிடம் விருப்பம் பெறப்பட்டே செய்யப்பட்டது 2005.12.24 அன்று சிலை திறப்புவிழா செய்வது என்றும் இதை அப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.M.Kசிவாஜிலிங்கம் அவர்களை கொண்டு திறப்புவிழா செய்வதென்றும் வடமராட்சியில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் சமாசம் ஊரில் உள்ள நிர்வாக பிரதிநிதிகள் எல்லோருக்கும் அழைப்பு கொடுப்பது என்றும் பெரியோர்களும் சங்கத்தினரும் எம்முடன் சேர்ந்து முடிவு செய்தனர். அப்பொழுது சங்கத் தலைவராக இருந்த இ.இந்திரராசா அவர்கள் மிக ஆர்வமாக இருந்தார் அடுத்த படியாக இ.புஸ்பராசா அமரர் நா.தருமராசா த.சண்முகவடிவேல் அமரர் இ.சிவசுந்தரம் அ.துரைராசா இ.நவரட்ணம் (குணம்) மு.சிவப்பிரகாசம் க.அருளானந்தராசா(பவாப்பா) செ.யோலிங்கம் நா.தேவசிகாமணி செ.சந்திரலிங்கம் என்போர் இந்த நிகழ்விற்கு எமக்கு உறுதுணையாக இருந்தார்கள்.இதற்குரிய பணம் ஊர் மக்களிடமிருந்து பெறப்பட்டது. M.K சிவாஜிலிங்கம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ' வல்வை ஸ்ரீ முத்துமாரிஅம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.சோ.தண்டபாணிகதேசிகர் ஐயா அவர்களின் ஆசியுரையுடன் சிலையை திறந்து வைத்தார்.டாக்டர் மயிலேறும் பெருமாள் சமாசபிரதிநிதிகள் சங்கங்கள் பொதுநிர்வாகத்தினர் பொதுமக்கள் மாணவர்கள் எனஎல்லோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.2006ம் ஆண்டு இராணுவகெடுபிடிகளுக்குமத்தியில் ஒருவாறுசெய்து முடித்தோம்.2007 2008 இடைப்பட்டகாலத்தில் சிலைஉடைக்கப்பட்டது.நாம் கூட மறைந்து வாழவேண்டியசூழ்நிலை இருந்தது.

2009இல் இருந்து MGR அவர்களின் பிறந்தநாளை விழாவாக செய்வது என்று எமது நற்பணிமன்றம் முடிவு செய்து பிறந்தநாளான ஜனவரி 17ல் விழாவாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.இதில் மாணவர்கள் மூத்தோர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள் இலவச பாட உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.2016ம் ஆண்டு வரை சிலை சேதப்பட்டமையினால் பெனர(Banner) படம் வைத்து விழா செய்யப்பட்டது.MGR சிலை அமைந்துள்ள இடம் வல்வை சிவன் ஆதினத்தாருக்கு சொந்தமான இடம். ஆகையால் அவர்கள் இவ்வளவு காலமும் செய்து விட்டீர்கள் இனி இந்த இடத்தை உறுதி முடித்து ஒவ்வொரு மாதமும் குத்தகைபணம் தர வேண்டும் என்று கேட்டார்கள்.நாமும் சம்மதம் தெரிவித்து காணி அளந்து எழுதுவதென்றும் நற்பணிமன்றம் பதிவு செய்யப்பாடமையால் மீனவர் சங்கத்தின் பெயரில் 05 வருட காலத்திற்கு ' சங்கத்தின் பெயரில் எழுதலாம் என்று நாமே கூறினோம். இப்பொழுது ஒரு மாதம் 840/= வரி கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.இக் காணி அளந்த நிலஅளவையாளர் அமரர் க.விமலதாஸ்

இலவசமாக அளந்து தந்தார்.3000/= தன்னுடைய பங்களிப்பாக இருக்கட்டும் தான் பொது காணிகள் அளந்தால் பணம் வாங்குவது இல்லை என்றார்.

## இரண்டாவது சிலை திறப்பு விழா

MGR உடைய 100வது பிறந்தநாள் 2017ம் ஆண்டு வருகின்ற படியினால் எப்படியாவது புதிதாக சிலை வைக்க வேண்டும் என்று என்னுடைய விருப்பம் , இல்லையேல் சிலையை புனரமைத்தேனும் செய்யவேண்டும் என்று பல சிற்ப ஆசாரிகளிடம் ஆலோசனை செய்தேன் அரசியல் பிரமுகர்களிடம் அனுகினேன் முடியவில்லை .இறுதியாக 2016 இந்தியதுணைத் தூதுவராகஇருந்த ஸ்ரீமான் ஆ.நடராஜா அவர்களிடம் எனது இந்தவிடயத்தைக் கூறினேன்.அவர் சிலைஅமைந்துள்ள இடம் எப்பொழுது வைக்கப்பட்டது என்றெல்லாம் கேட்டார்.நான் அதற்குரிய பதிலை கூறினேன்.அவர் தான் ஒரு ஆளை அனுப்புவதாகவும் அவர் வந்து சிலையைப் பார்த்து வேலை செய்து தருவார் என்று கூறினார்.இரண்டு நாட்களின் பின் ஒரு இந்திய ஆசாரியார் வந்து பார்வையிட்டார் அவர் இது திருத்த முடியாது புதிதாக செய்ய வேண்டும் என்றார்.புதிதாக செய்வதற்கு எவ்வளவுபணம் வேண்டும் என்று அவரிடம் கேட்டேன்.அவர் கூறினார் நீங்கள் பணம் தர வேண்டாம் நான் புதிதாக MGR சிலை செய்து தருகின்றேன்.MGR எல்லோருக்கும் சொந்தமானவர் என்று கூறினார்.எனக்கு மிக்க மகிழ்ச்சி இதுவரை யாருக்கும் இந்த விடயம் தெரியாது சரிவருமா? ஏன்ற சந்தேகம் எனக்குள் இருந்தது மூன்று மாதத்தின் பின்பு ஆசாரியார் வருமாறு அழைத்தார் சென்று பார்த்த போது சிலை வேலை 90 வீதம் முடிந்து சிறுதிருத்தங்கள் இருந்தது அதையும் சரி பார்த்தனர்.அதன் பின்பு தான் எமது நற்பணிமன்றத்தினருக்கு இது பற்றி கூறினேன்.மறுநாள் சென்று சிலை ஏற்றி வரப்பட்டது.வேலை செய்த பணியாளர்களிடம் விலை பற்றி கேட்ட பொழுது இரண்டு இலட்சம் முடியும் என்று கூறினார்கள்.6000 ரூபா செலவுடன் சிலை வந்தது.2017ம் ஆண்டுபிறந்தநாள் சிலை திறப்பு விழாவுடன் நடைபெற்றுது.வல்வைமுத்துமாரிஅம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.சோ.தண்டபாணிகதேசிகர் ஐயா அவர்களின் ஆசியுரையுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போது வடமாகாண சபை உறுப்பினரும் ஆகிய திரு.M.K.சிவாஜிலிங்கம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இடம் புனரமைப்பு

2017ம் ஆண்டு சிலையை திறப்பு விழாசெய்து உரையாற்றய திரு ஆ.மு சிவாஜிலிங்கம் அவர்கள் இந்த இடம் புனரமைப்பு பற்றி தலைவர் T.ஜெயராஜ் அவர்கள் இந்த தலைமை உரையில் கூறியுள்ளார்.இதை தான் கவனத்தில் எடுப்பதாகவும் வடமாகாணசபையில் .இருந்து இரண்டு இலட்சம் ரூபா பணம் MGR

நற்பணி மன்றத்திற்கு வழங்குவதாகவும் கூறினார்.அவர் கூறியது போல் இல்லாமல் கூடுதலாகவும் பணம் ஒதுக்கீடு செய்தார் அவரால் வழங்கப்பட்ட தொகை **28300/=** ஆகும் .அடுத்தபடியாக.திரு.தர்மலிங்கம் (வடமாகாண சபை உறுப்பினர்) ஊடாக 67400 பெறப்பட்து. .அத்தோடு பொதுமக்கள் **MGR** ரசிகர்களிடமிருந்து மேலதிக நிதி பெறப்பட்டு இடமும் புனரமைக்கப்பட்டு சிலைக்கு மேலாக பிளாட் போடப்பட்டுள்ளது.எல்லையிலும் கம்பிகிறீல்(பிளாஸ்ரிக் கம்பி வேலி) அமைக்கப்பட்டுள்ளது.இதற்கு செலவாகிய மொத்தப் பணம் 1000000 (பத்துலட்சம்)இதற்கு என்னுடன் தோளோடு தோள் நின்று எதுவித வேதனமும் இல்லாமல் உழைத்தவர்கள் அமரர் சா.திருக்குமரன் திரு.செ.சந்திரலிங்கம் திரு.நா.தேவசிகாமணி இன்னும் அயலிலுள்ளவர்களும் மற்றும் பல ரசிகர்கள் தாமாகவே முன்வந்து கூடுதலான பண உதவிகளை செய்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.ஒவ்வொரு வருடமும் 100க் கணக்கான மாணவ மாணவியருக்கு இலவச பாட உபகரணம் வழங்குகின்றோம்.முதியோர்ர சாதனை மாணவர்க்ள சாதனையாளர்கள் என்போரையும் வருடாந்தம் விழாவில் கௌரவப்படுத்தி வருகின்றோம்.

ஏதிர்கால சந்ததியினரை இன்னும் நல்லதிட்டங்களை செயல்ப்படுத்துவதே எமது நோக்கம் ஆகும். **MGR** நற்பணிமன்றம் உருவாக்கப்பட்டது பணம் சேர்ப்பதற்காக அல்ல ஆனால் எமது கொள்கைகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

- ✓ ஏழை மக்களுக்கும் ,அங்கவீனர்களுக்கும் உதவுதல்
- ✓ எதிர்கால சந்ததியினரை நல்லவர்களாகவும் கல்வி அறிவுள்ளவர்களாகவும் இரக்கம், கருணை அன்பும் நிறைந்தவர்களாகவும் ஆக்குதல்
- ✓ சகலரையும் இரக்கம் கருணை மற்றும் அன்பு நிறைந்தவர்களாக உருவாக்குதல்.
- ✓ எம்.ஜி.ஆரின் கொள்கையான கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றை யாவரும் கடைப் பிடிக்க உதவி செய்தல்.
- ✓ எம்.ஜி.ஆருடைய நல்ல சிந்தனைகளை அழியவிடாமல் பேணவேண்டும் என்பதற்காகவே நாம் இதனை கொண்டாடுகின்றோம்.

இவ்அமைவிடம் தற்பொழுது எம்.ஜி.ஆர் சதுக்கம்(**MGR SQUARE**) என்று எம்மால் பெயரிடப்பட்டுள்ளது.இதற்கு முன்னின்று பணி ஆற்றியவர்களில் அமரர் க.அருளானந்தராசா (பவாப்பா) அமரர் சா.திருக்குமரன் ஆகியோர் இன்று எம்முடன் இல்லை அவர்களின் குடும்பத்தாருக்கு எம்.ஜி.ஆர் நற்பணிமன்றத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பொழுது செயலாற்றுபவர்கள் திருவாளர்கள் தி.ஜெயராஜ் நா.தேவசிகாமணி செ.சந்திரலிங்கம் செ.யோகலிங்கம் ஆவர்.அத்துடன் ஆலோசகர்களாக திரு.இ.புஸ்பராசா(ஆனந்தி அப்பா) திருஇ.நவரட்ணம்(குணம்) ஆகியோர் பணியாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள்.எமக்கு இந்த இடத்தினை தந்து உதவிய வல்வை வைத்தீஸ்வரன் ஆதினத்தாருக்கும் இதற்கு பண உதவி சரீர உதவிகள்

**செய்த அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**மனம் கொள்ளவேண்டியது:**

**இலை மறை காயாக இருந்து ஆரம்ப காலம் தொட்டு எமக்கு ஆலோசனைகளையும் நிகழ்ச்சித்திட்ட ஒழுங்குகளையும் செய்து வரும் எமது மண்ணின் மூத்த பிரஜையாகி ஓய்வு நிலை இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் திரு நடராஜா சிவரட்ணம் (Banker ஜெயம் ) அவர்களது பணிக்காகவும் இவ் ஆவணத்தை உருவாக்கியதற்காகவும் எமது நற்பணிமன்றத்தின் சார்பில் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம் .**

## MGR கலைப்பணிமன்றம்

# தொகுப்பு ஆசிரியரின் சில குறிப்புக்கள்

அமரர் MGR அவர்களின் பிறப்பும் வாழ்வும் எனதுஅறிவிற்கு எட்டியபடி MGR அவர்களின் தந்தை(மருதூர் கோபாலசாமி) இந்தியாவில் ஒரு கௌரவமான நல்ல தகைமைகள் உள்ள அதிகாரியாக கடமையாற்றி வந்தார் இவருக்கு சாரங்கபாணி எனும் மூத்த சகோதரரும் இருந்திருக்கின்றார்.

நேர்மையான இவ் அதிகாரியை அதாவது அந்தமான் தீவில் நீதிபதியாக கடமையாற்றிய இவரை தவறான காரியங்களை செய்யுமாறு சில சக்திகள் வற்புறுத்தியும் இலஞ்சம் கொடுக்கமுன் வந்தும் அவருக்கும் அவரது உயர் பதவிக்கும் அவதூறு விளைவிக்கும் வண்ணம் நெருக்குதலை கொடுத்து வந்தனர்.இந் நெருக்குதல் ஆங்கிலேயராலேயே கொடுக்கப்பட்டது.ஈற்றில் அடிபணியாத இவர் மனைவி சத்யபாமாவின் வேண்டுதலை ஏற்று குடும்பத்துடன் இலங்கையில் வந்து குடியேறினார்.

இதனால் விரக்த்தியுற்ற MGR ரின் தந்தையார் இந்திய நாட்டையே விட்டு குடும்பத்துடன் இடம் பெயர்ந்து கண்டியில் வசித்து வந்தார்.

இங்குதான் கண்டிக்கு அருகே உள்ள நாவலப்பிட்டி என்ற (கோபாலமேனனுக்கும் சத்யபாமாவிற்கும் MGR அவதரித்தார்.MGR எனும் பெயர் உருவாக்கியமைக்கு காரணம் பாட்டன் பெயர் மருது(Maruthu) தந்தை பெயர்

கோபாலமேனன்(Gopalamenan) தாயினால் இடப்பட்ட பெயர் இராமச்சந்திரன்(Ramachandran) இவ் முதல் எழுத்துக்கள் சேர்ந்தே இவ் அதிஸ்ட பெயர் அமைய நேர்ந்தது.

இவர் இரு திருமணங்கள் இருந்த போதும் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை.இவர் நடித்த முதல்ப்படம்(1936-சதிலீலாவதி) இவரது வாழ்வில் துர்ப்பாக்கிய சம்பவமாக சக நடிகரான M.R ராதாவினால் சுடப்பட்டமையை குறிப்பிடலாம்.

இலங்கையிலும் அவருடைய திறமையை பயன்படுத்த உரிய அதிகாரிகள் முன் வராமையால் மூத்தமகன் சாரங்கபாணியுடனும் இளையமகன் MGR அவர்களுடனும் மீண்டும் இந்தியாவிற்கே புலம் பெயர்ந்தனர்.

நேர்மையை கடைப்பிடிக்கும் இக் குடும்பத்தினருக்கு இயல்பாகவே பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டது இதனால் சிறுபாராயத்திலேயே அங்கு நடாத்தப்பட்டு வந்த நாடகக் கம்பனிகளில் இணைந்து எடுபிடிவேலைகள் செய்ததுடன் சிறு சிறு பாத்திரங்களிலும் நடிக்கத் தொடங்கினார்.

ஈற்றில் இவரது நடிப்புத் திறமை பலராலும் பாராட்டப்பட்டு சினிமாத்துறைக்கு உள்வாங்கப்பட்டார்.

சினிமாவில் வில்லனாகவும் கதாநாயகனாவும் குணசித்திரநடிகனாகவும் பல நூற்றுக் கணக்கான திரைப்படங்களில் நடித்து தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

**தமிழ் நாட்டிலே தொட்டிபட்டி எங்கும் இவரது புகழ் பரவியது.**

**இவருக்கு புரட்சித் தலைவன்................என்ற பல பட்டங்கள் ரசிகர்களாலும் சமூகசேவர்களாலும் அரசியல் பிரமுகர்களாலும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.**

**இவர் தன்னுடன் தனது மூத்த சகோதரருமான சாரங்கபாணியையும் சினிமாவுக்குள் உள்ளர்த்துமலைக் கள்ளன் போன்ற பிரபல்யமான திரைப்படங்களில் நடிக்கத் வைத்து அவருக்கும் தனது பெற்றோருக்கும் புகழைத் தேடிக் கொடுத்தார்.**

**இவரதுநடிப்புத் திறமையும் மக்களை ஈர்க்கும் சக்தியினையும் அவதானித்த பல அரசியல் தலைவர்கள் இவர்களை அரசியலுக்கு புகுத்த நினைத்த போதிலும் இறுதியில் இவர் "அறிஞர் அண்ணா"என பலராலும் அறியப்பட்ட அமரர் C.N அண்ணாத்துரை அவர்களின் தலைமையைக் கொண்டஅரசியலில் ஈடுபட்டார்.**

**ஈற்றில் அண்ணாதிராவிடக் கழகத்தின் தலைமை பதவியை ஏற்றதுடன் தமிழ் நாட்டின் முதல் மந்திரியாகவும் தெரிவு செய்யப்பட்டு பலராலும் போற்றப்பட்ட ஒரு தலைவனாக திகழ்ந்தார்.**

**இயல்பாகவே ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை நன்குஅறிந்த இவர் சமூகவிடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தன்னாலான பெரும் நிதி உதவியை வழங்கி அவர்களுக்கு**

உதவியதாக பல பத்திரிகை வாயிலாகவும் அரசியல் நூல்கள் ஊடாகவும் அறியக் கிடைக்கின்றது.இதனால் இலங்கைஅரசாங்கத்தின் எதிரியாகவே இவர் கணிக்கப்பட்டார்.சிறுகுறிப்பு தமிழிலுள்ள வரலாற்றுப் போராட்டத்தில் அடித்தளத்தை திரமாக்கி ஈழ மக்களுக்காக பல உதவிகளை தனது அதிகார வரம்புகளையும் மீறி தனிப்பட்ட முறையில் புரிந்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கு மட்டுமல்லாது வட இந்தியர்களுக்கும் இவர் பொது எதிரியாக கருதப்பட்டார்.இதனாலோ என்னவோ இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்த போது எமது மண்ணிலுள்ள இல்லங்களில் வைத்துப் போற்றப்பட்ட இவரது உருவப் படங்களும் அடித்து நொருக்கப்பட்டன.

தமிழ் ஈழப்போராட்டங்களில் இவரது ஆணித்தரமானதும் ஆழமான பங்களிப்பையும் எமது மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே இலங்கைவாழ் தமிழ் மக்கள் இவரைநினைவு கூர்ந்துவருடாந்தம் விழாஎடுத்துவருகின்றனர்.இவரது 100 வதுபிறந்தநாள் நினைவேந்தலும் பரவலாக இந்தியாவைவிட இலங்கையில் காத்திரமாககொண்டாடப்பட்டது.

இவ் வகையில் ஆதிகோவிலடியில் அமைந்துள்ள MGR கலைப் பணிமன்றத்தின் சேவையைகட்டுரையாளர் தரமனமுவந்துபாராட்டுகின்றனர்.இவர்களது கலைப் பணி தொடர பலரது ஆசிகளுடன் எனது ஆசியும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

குறிப்பு:-இத்துடன் ஆதிகோவிலடி MGR கலைப்பணிமன்றத்தின் தலைவர் திரு.தி.ஜெயராஜ்சினால் எழுதப்பட்ட கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

வாசகர்களின் நன்மை கருதி Google இணையத்தளத்தில் பெறப்பட்ட தகவல்களையும் இத்துடன் இணைக்கின்றோம்.

***எம். ஜி. ஆர்*** *என்றபெயரில்புகழ்பெற்ற,* ***மருதூர்கோபாலமேனன்இராமச்சந்திரன்*** *(எம். ஜி. இராமச்சந்திரன், சனவரி 17, 1917 – டிசம்பர் 24, 1987), தமிழ்த்திரைப்பட நடிகராகவும் 1977 முதல்இறக்கும்வரை தமிழ்நாட்டின் தொடர்ந்துமூன்றுமுறை முதலமைச்சராகவும் இருந்தவர்.*

*எம். ஜி. சக்கரபாணிக்குத் தம்பியானஇவர், தொடக்ககாலத்தில்நாடகங்களில்நடித்தார். காந்தியடிகளின் கருத்துகளால்ஈர்க்கப்பெற்று இந்தியதேசியகாங்கிரசில் இணைந்தார்.1936 இல் சதிலீலாவதி என்றதிரைப்படம்மூலம்தமிழகதிரைத்துறையில்அறிமுகமாகி, கதாநாயகனாகமாறியபிறகு, அறிஞர் அண்ணாவின் அரசியல்கருத்துகளில்ஈர்க்கப்பெற்று திராவிடமுன்னேற்றக்கழகத்தில் இணைந்தார்.*

அண்ணாவின்மறைவுக்குப்பிறகு, கருணாநிதியால்திமுகவிலிருந்துநீக்கப்பட்டார். அதன்பின் அண்ணாதிராவிடமுன்னேற்றக்கழகம் என்றஅரசியல்கட்சியைத்தொடங்கி, தேர்தலில்நின்றுதொடர்ந்துமூன்றுமுறைதமிழகத்தில்வெற்றிபெற்றுமுதலமைச்சரானார்.

## தனிப்பட்டவாழ்க்கை

### இளமைப்பருவம்

இராமச்சந்திரன் இலங்கையின் கண்டிக்கு அருகேயுள்ள நாவலப்பிட்டி என்றஇடத்தில் கோபாலன்மேனன் - சத்யபாமாஆகியோருக்கு (1880 - 5/08/1952) 5வதுமகனாகப்பிறந்தார். இவருடன்பிறந்தவர்கள்சக்கரபாணி, காமாட்சி, சுமதிரா, பாலகிருஷ்ணன்ஆகியோர்ஆவா்

அவருடையதந்தைமருதுார்கோபாலமேனன்வழக்கறிஞராக கேரளாவில் பணியாற்றிவந்தார், அதன்பிறகு அந்தமான்தீவில் உள்ளசிறையில்கிரிமினல்கோ ா ் ட்நீதிபதியாகபணிபுரிந்துவந்தார். அப்போதுஆங்கிலயர்களின்அடக்குமுறைஆட்சிஎன்பதால்தினமும்சுமா ா ் 20 சிறைகைதிகளுக்குதுக்குதண்டனைஅளிக்கும்குற்றவியல்நீதிபதியாகஇருந்தா ா ். பின்புமனைவிசத்யபாமாஅவர்கள்இந்தஉயிரைஎடுக்கும்வேலைநமக்குவேண்டாம்என்றுகூறஅந்தநீதிபதிவேலையயைரத்துசெய்துவிட்டா ா ். அந்தராஜினமாவைஏற்றுகொள்ளாதஆங்கிலயர்கள்பயங்கரசூழ்ச்சிக்குகோபாலன்மேனனைஆளாக்கினா் (Weppan ship) ஆயுதகப்பலுக்கு (Dynamate Flash) டைனமெட்வெடிவைத்ததாககூறிபொய்யானபுகா ா ி ல்சிறிதுகாலம்கோபாலன்மேனனைசிறையில்அடைத்தனா். பின்புஅவர்குடும்பத்துடன்இலங்கையில்சென்றுகுடியேறினர்அவரதுநண்பர்உதவியுடன் ஒருபள்ளியில் (Princepal) தலைமைஆசிரியர்ஆகபணிபுரிந்துவந்தா ா ்.

எம். ஜி. ஆர் க்குராமசந்திரன்என்றுபெயர்ஏற்படகாரணம்அவரதுதந்தைகோபாலன்மேனன்தந்தைபெயர்சந்திரசேகரன்மேனன்அதில்சந்திரன்என்றும்தாயா ா ் சத்யபாமாஅவர்களின்தந்தைபெயர்சீதாராமன்நாயர்என்பதில்ராமஎன்பதைசேர்த்துராமசந்திரன்என்றுபெற்றோ ா ் கள் அந்தபெயரைவைத்தனா்.

பின்பு எம். ஜி. ஆர் அவர்களின்தந்தையின்மறைவுக்குப்பின்னர் தமிழ்நாட்டின் கும்பகோணத்தில் எம்.ஜி.ஆர்குடியேறினார். குடும்பசூழ்நிலைகளின்காரணமாகப்படிப்பைத்தொடரமுடியாததால்இவர்நாடகங்களில் நடிக்கத்தொடங்கினார். இவருடன் சக்ரபாணி என்றசகோதரரும்நாடகத்தில்நடித்தார். நாடகத்துறையில்நன்குஅனுபவமானநிலைமையில்திரைப்படத்துறைக்குச்சென்றார். திரைப்படத்துறையில்தனதுஅயராஉழைப்புக்காரணமாகமுன்னேறிமுதன்மைநடிகரானார். இவரதுநடிப்புபெரும்எண்ணிக்கையிலானமக்களைக்கவர்ந்தது. எம்.ஜி.ஆர்.

திரைப்பட இயக்குனரும், தயாரிப்பாளருமாவார். காந்தியகொள்கைகளால்உந்தப்பட்டு, இவர் இந்தியதேசியகாங்கிரசில் சேர்ந்தார்.

## இல்லறம்

### முதல்திருமணம்

எம்.ஜி.ஆர்முதலில்தங்கமணியைமணந்தார். பிரசவத்திற்காகத்தாய்ஊருக்குச்சென்றதங்கமணிக்குகுழந்தைஇறந்தேபிறந்தது. அதன்பின்தங்கமணியும்உடல்நலக்குறைவினால்இறந்தார்.

### இரண்டாவதுதிருமணம்

அதன்பிறகுசதானந்தவதியைமணந்தார்எம்.ஜி.ஆர். இருவருக்கும்குழந்தைகள்இல்லை. பின்னர்சதானந்தவதிநோய்க்காரணமாகஇறந்தார்.